# பேராசிரியர் புல்ஜன்ஸ் வழக்கில் காமினிக்கு விடுதலை

(கொழும்பு)
பேராசிரியர் ரால்ப் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கிலிருந்து முன்னாள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா விடுதலை செய்யப்பட்டுள்ளார். 1988ம் ஆண்டு ஜூன் மாதம்

(4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப் பகுதி

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 18 இதழ் 50
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 31 — 03 — 1992

## தேசத் துரோகிகள் ஐவருக்கு மரண தண்டனை

[யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இரகசியப் பொலிஸ் அதிகாரி தி. தாமோதரம்பிள்ளை, [உரும்பிராய்] இவருக்கு துணையாக செயற்பட்ட முன்னாள் யாழ். உதவி மேயர் சொ. பேரின்பநாயகம் [குருநகர்],

(4-ம் பக்கம் பார்க்க)

## சூரியத்தாக்குதலில் இருபடையினர் பலி

(கொழும்பு)
பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினரில் 'சூரியத் தாக்குதலுக்கு' இலக்காகி இரு படையினர் உயிரிழந்ததுடன் 18 படையினர் மோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

★ தமிழர் பிரச்னையில்

# பௌத்த பிக்குகளின் முயற்சி தீர்வுக்கு நல்லவழி ஏற்படுத்தும்!

(கொழும்பு)
**இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்பட்டு வருவதாகவும் பௌத்தபிக்குகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய முன்வந்திருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.**

இலங்கையின் இனப்பிரச்னை தீர்வுக்கு கடந்தகாலப் பகுதிகளில் தீர்வு நடவடிக்கைகள் பல்வேறு அரசாங்களினால் மேற்கொள்ளப்பட்ட போது பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் அவற்றுக்கு தடையாக இருந்து வந்தது அரசியல் அவதானிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால் கடந்தசில மாதங்களாக இலங்கைஇனப்பிரச்னை தீர்வுக்குப் பௌத்த பிக்குகள் மத்தியில் குறிப்பிடத்தக்

(4-ம் பக்கம் பார்க்க

## பௌத்த பிக்குகள் குழு 15 ம் திகதி யாழ். வரும்

(கொழும்பு)
பௌத்த பிக்குகளை கொண்ட சமாதானக்குழு ஒன்று எதிர்வரும் 15 ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

அமரபுர நிக்காய வண பலபிட்டிய சித்தார்த்ததேரர் தலைமையில் இங்கு வரும் எட்டுப்பேரடங்கிய இக்குழுவில் நன்கு தமிழ் பேசக் கூடிய சில பிக்குகளும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் வரும் இக்குழு விடுதலைப் புலிகளின் தலைவர்களை சந்திப்பதுடன் பொதுமக்களையும்சந்திக்கவுள்ளனர். மேலும் யாழ். ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்வதுடன் புலிகளின் பாதுகாப்பிலுள்ள40 சிங்கள பொலிஸாரையும் சந்திக்க முயல்வார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## படையினருக்கு உதவியாக மணலாறில் கடும் குண்டுவீச்சு

(மணலாறு)
மணலாறு கொக்குத்தொடுவாய் பகுதிகளில் நேற்று பலமணிநேரம் கடும் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பகுதியில் தற்பொழுது இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்குஉதவியாகவே இக்குண்டு வீச்சு தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இக்குண்டு வீச்சினால் காடு கொண்டிருப்பதாகத் தெரிகள் பல தீப்பிடித்து எரிந்து விக்கப்படுகிறது.

## மகாபொல புலமைப் பரிசில் நேரில் வராதோருக்கு வழங்கப்படும் ஜனாதிபதி

(மாத்தளை)
மகாபொல புலமைப் பரிசில்களை நேரடியாக வந்து பெறமுடியாத மாணவர்களுக்கும், புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் மாதாந்தம் வழங்கப்படுமென ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று மாத்தளையில் தெரிவித்தார்.

மகாபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 27,174 மாணவர்கள் பயனடைகின்றனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## விமானத்தாக்குதலில் பூநகரியில் வீடுகள் சேதம்

[பூநகரி]
பூநகரிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை நடாத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் காலை 9-30 மணிமுதல் 12மணிவரை இத்தாக்குதல்கள் தொடர்ந்தன. செட்டியா குறிச்சிப் பகுதியில் அவ்ரோ வீசிய 3 குண்டுகளில் பல வீடுகள் சேதமுற்றன.

நாலாம் கட்டைப் பகுதியில் நான்கு குண்டுகள் வீசப்பட்டது. இதன்போதும் பல வீடுகள் சேதமுற்றன. [சி]

## மகாபொல 1,000 ரூபாவாக அதிகரிப்பு

[கொழும்பு]
மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய அதிகரிப்புக் கொடுப்பனவு நாளை 1ம் திகதி தொடக்கம் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## யாழ் வரும் தேரர் ஹமில்டனை சந்தித்தார்

(கொழும்பு)
தமது யாழ்ப்பாண விஜயம் குறித்து அமரபு நிக்காய வண பலபிட்டிய சித்தார்த்த தேரர் கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

தமது குழுவின் யாழ்ப்பாண விஜயத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தேரர் ஹமில்டனுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இதவேளையில் தமது யாழ். விஜயத்திற்கான போக்குவரத்து நிலைமை குறித்துமேற்படி தேரர் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்துடனும் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார். (சி)

## கண்டியில் குண்டுச் சத்தங்கள்

(கண்டி)
கண்டிப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இருபாரிய குண்டுச்சத்தங்கள் கேட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
வவுனியாவில் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்றுக் காலை 6-00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலிலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (சி)

## உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)
வறுமை நிவாரண புதிய உணவு முத்திரைகள் லில்லிவில்லி கப்பலில் வருவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளினூடாக இந்த உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளது. (வி)

## க. பொ. த [சா/த] 1991 பெறுபேறுகள் முதலில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சை 1991ம் ஆண்டுக்குரிய பெறுபேறுகள் வெளிவந்த இரண்டு வாரங்களுக்குப் பின்பே கல்விப் பொதுத் தராதர (சாதாரண) விசேட பரீட்சை 1990க்கான பெறுபேறுகள் வெளிவரலாம்.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

யாழ். மாவட்டத்தில் மேற்கூறிய பரீட்சைக்கான செயல்முறைப் பரீட்சைகளின் பெறுபேறுகள் கொழும்புக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும்

பெரும்பாலு ஏப்ரல் முதல் வாரத்தில் 1991 பெறுபேறுகள் வெளிவரக்கூடும் என்று பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சு)

# மணலாறில் சீன டாங்கியை புலிகள் எப்படி தாக்கினர்!

## படை அதிகாரி விளக்கம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளின் டாங்கி எதிர்ப்புப் படையினர் மணலாறில் ஒரு புதுவித சீருடையும் சக்திவாய்ந்த தலைக்

காணப்பட்டனர் என்று மணலாறு சண்டையில் பங்குபற்றிய சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

முக்கியமான கையேட்டு பதிப்புத்தகம் 30ம் திகதி காலை சிவலிங்கப்புளியடிக்கும் ஐந்து சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்பெசல்இஞ்சினியரிங் வேக்ஸ் முட்டாசுகடை சந்தி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-2007)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைக்காலவியல், சருமநோய்கள், மாதவிடாய் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்கள், பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6030)


ஆனையிறவு

## முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

(பளை)

ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அநேகமாக இரவு நேரங்களிலேயே தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. இச்ஷெல் பளை வரைக்கும் செல்வதால் பளைப்பகுதி மக்கள்அச்சமடைந்துள்ளன.

வீட்டில் தீப்பற்றி

## குழந்தை காயம், பொருட்கள் சேதம்

(பளை)

செம்பியன்பற்று பகுதியில் நாகலிங்கம் என்பவரின் வீடு தீப்பற்றியதால் ஒரு அறைக்குள் இருந்த குழந்தை ஒன்று தீக்காயங்களுக்குள்ளாகியது. சுமார் 10,000 ரூபா பெறுமதியான நெல் மூடைகள் எரிந்து சாம்பரானது.

வடக்கு - கிழக்கு எழுத்தாளர்களின்

# பத்து இலக்கியத்துறைப் படைப்புகளுக்கு பரிசு

(சித்தன்கேணி)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள எழுத்தாளர்களினால் 1990, 1991-ம் ஆண்டில் அச்சில் வெளிவந்த இலக்கியப்படைப்புக்களுக்கு யூலை மாதம் நடைபெறவுள்ள சாகித்திய விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

1990-ம், 1991-ம் ஆண்டில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை (மரபு, புதுக்கவிதை, சமய இலக்கியம், வரலாறு, ஆய்வு இலக்கியம். நாடகம், சிறுவர் இலக்கியம், மொழியியல் ஆகிய பத்து இலக்கியத்துறைகளின் படைப்புக்களையும் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி கலாச்சார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாண எழுத்தாளர்களிடமிருந்து இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்பு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளது.

யூலை மாதம் நடைபெறவுள்ள இலக்கிய விழாவின் போது தேர்ந்தெடுக்கப்படும் நூல்களுக்கு 3,000 ரூபா ரொக்கப் பணமும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண எழுத்தாளர்களினால் அச்சில் வெளிவந்த தமது இலக்கியப் படைப்புக்களின் ஒவ்வொரு படைப்பினதும் மூன்று பிரதிகளை இம்மாதம் 31-ந் திகதிக்கு முன்பு பணிப்பாளர், கலாச்சார அலுவல்கள், கல்வி, கலாச்சார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## பொருத்தமற்ற ஆசிரியர் இடமாற்றத்தால் பாதிக்கப்படுவது மாணவரே

(உடுவில்)

''பொருத்தமில்லாதஆசிரிய இடமாற்றங்களும், அறிக்கைகளும் மாணவ உலகிற்கு நன்மை தரப்போவதில்லை. தமிழீழப் பிரதேச மாணவர்களுக்கு எதிர்காலத்தில் கல்வி பயில்வதற்கு எந்தவிதமான குறைபாடுகளும் இருக்கக்கூடாது. ஆசிரிய வள அணி பற்றுக்குறையை நிவர்த்தி செய்யவே தற்காலிக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன.''

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க கல்வி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அருண் மாஸ்டர் மருதனமட கல்விக் கழக அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அருண் மாஸ்டர் மேலும் கூறியதாவது:

மேடைப் பேச்சுக்கள்தவிர்க்கப்பட்டு செயல் மூலமான செயற்பாடுகள் இருக்கவேண்டும். மேலிடம் கூறியதாக தம் இஷ்டப்படி பொருத்தமில்லாத ஆசிரியர்கள் இடமாற்றங்களைக் செய்வதனால் பாதிக்கப்படுபவர்கள் எமது மாணவர்கள்தான்.

திரு. இ சிவானந்தன் தனது தலைமையுரையில் கூறியதாவது:

ஆசிரிய ஆளணிகளை அதிபர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். கல்விக்கழக ஆசிரியர்களுக்கென திரட்டப்படும் நிதி பற்றிய பூரண விளக்கத்தை அவர்கள் நன்கு விளக்கவேண்டும். கல்வி அபிவிருத்திக் கழகம் நடாத்தும் ஆசிரிய பயிற்சிகளில் ஏனைய தொண்டர் ஆசிரியர்களும் பங்குபற்றி பயனடைய அனுமதிக்கவேண்டும், (109)

வடக்கு-கிழக்கு

# அபிவிருத்தி திட்டம்

## அறிக்கை தயாரிக்கப்படும்

[கொழும்புத்துறை]

வடக்கு-கிழக்கு மாகாண சபை 1993 ம் ஆண்டுக்குரிய அபிவிருத்தித்திட்டம் சம்பந்தமான அறிக்கைகளைப் பிரதேச செயலகங்களிடம் கோரியுள்ளது.

இவ் அபிவிருத்தித்திட்டத்தின் பிரகாரமே அடுத்தாண்டு வடக்கு-கிழக்கில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டத்தை பிரதேச செயலகங்கள் தயாரிப்பதற்காக சன சமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் தத்தமது பகுதிகளில் மேற்கொள்ளவிரும்பும் அபிவிருத்திகள்பற்றிய அறிக்கைகளை அவ்வப்பகுதி பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

## யாழ். நகரில் கண்நோய்

(ஊர்காவற்றுறை)

கடும் வரட்சி காரணமாக யாழ். நகர்ப்பகுதிகளில் பரவலாக கண்நோய் பரவியுள்ளது. (59)

## இன்று

### தீக்குளிப்பு

[யாழ்ப்பாணம்!

யாழ். கந்தர்மடம் ரயில்வே கடவை ஞானவைரவர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நாட்டின் நன்மை கருதி தீக்குளிப்பு வைபவம் நடைபெறும்.

### ஔவையார் விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் ஔவையார் விழாஇன்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக கொண்டாடப்படவிருக்கிறது.

இன்றைய தினம் காலையில் விசேட பூசை, அபிஷேசங்களும் பிற்பகலில் சிறப்புச் சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம் ஆகியன இடம்பெறவுள்ளன.

மேற்படி ஆலய ஔவயார் விழாக் குழுவினர் விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. (க)

### பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் துணைஅதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.எஸ். இராமதிலகம், ஆசிரியை திருமதி பிநாகபாணி ஆகியோரின் சேவைநலம் பாராட்டி இன்றுகாலை கல்லூரி மண்டபத்தில் கவிஞர் பாவலவன் தலைமையில் பிரிவுபசாரவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கவிஞர்கள் சிவகுமார், எம். பி. அருளானந்தம், கடவுள் சுப்பிரமணியம், க. சத்தியசீலன், மாணவக் கவிஞர்கள் சதீஸ் குழுவினரின் 'மாவீரர் பாவாரம்' ஆகிய கவிதை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

விழாவின் சிறப்பு விருந்தினர்களாக கல்லூரி அதிபர் திரு. கேசவராசனும், துணை அதிபர் திரு. எஸ். பத்மநாதனும் கலந்துகொள்வர். (சி)


உ

நம்பிக்கை  நம்பிக்கை

''நம்பிக்கை கொண்டோர்க்குத் தும்பிக்கையான் துணை''

இருள்சூழ்ந்த தமிழீழ மக்களுக்கு விடிவு ஆரம்பிக்கும் நாள். 06-04-1992.

வரும் சித்திரை 06ம் திகதி தமிழீழ மக்களின் விடிவு ஆரம்பிக்கும் நாளாக எம்பெருமான் அருள்பாலித்திருப்பதால் அத்தினத்தை முன்னிட்டு 01-04-92 தொடக்கம் 06-04-92 வரையான 06 நாட்களுக்கும் வேண்டுபவர் வேண்டமுன் கொடுக்கும் **சுழிபுரம் பறளை ஈசுரவிநாயகப் பெருமானுக்கு** விசேஷ அபிஷேக பூஜை அர்ச்சனைகள் நடைபெறும் என்பதை தேவஸ்தானம் அறியத்தருகின்றது.

06-04-92 திங்கள் நண்பகல் 12-00 மணிமுதல் விசேஷ அபிஷேகம் ஆரம்பமாகி பி. ப. 3-00 மணியளவில் சதுர்த்திப் பூஜை வழிபாடுகளுடன் பஞ்சமுக விநாயகன் எழுந்தருளி அடியார்களுக்குக் காட்சி தருவார். அதனைத் தொடர்ந்து ''தர்சனங்களும் மதிப்பீடுகளும்'' என்பது பற்றி ஆலயகுரு நற்சிந்தனை வழங்குவார்.

இரவு 7-00 மணியளவில் **விடுதலைப் புலிகளுக்கு எம்பெருமானின்** அருள் வேண்டியும், மக்களின் விடிவிற்காகவும் (108) விடி விளக்குகள் ஏற்றிவைக்கப்படும்.

அடியார்கள் வந்து விநாயகனின் இஷ்டசித்திகளைப் பெற்று ஏகுமாறு தேவஸ்தானம் கேட்டுக்கொள்ளுகின்றது.

"சோழியூரான்"
பிறைசூடிக்குரு,
தேவஸ்தான சந்ததிப் பூசகர்,
ஓய்வுபெற்ற ஆசிரியர்,
(தர்மசாஸ்தா குருகுல மாணவன்)

(எ-2006)


# பவளவிழா காணும்

## யாழ். மாவட்ட சாரணர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் இயக்கத்தின் 'யாழ் போறி' விரைவில் 75வது ஆண்டு விழா (பவளவிழா)வை வெகு சிறப்பா கொண்டாடப்படவுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கான போட்டிகளாக அணிநடை, நிலைக்காட்சி, மைதானக் காட்சி, பாசறை தீ, பாசறை அமைப்பு, பதிவேடு, சேவை வாரம், நாட்டுக்கான சேவை, சமூக சேவை, விருதுக்ள், சகல துறை வெற்றிக்கேடயம், யாழ் போறி வெற்றிக்கேடயங்களும் வழங்கப்படும்.

மற்றும் பொருட்காட்சி, கலை நிகழ்ச்சிகளும் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சி)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வதிவிட வேளாண்மை போட்டி பிரதேச மட்ட பரிசளிப்பு விழா ஏப்பிரல் மாதம் 10-ம் தேதிவரை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் அவ்வப் பிரதேசங்களில் உள்ள உதவி அரசாங்கஅதிபர், கமநலசேவைத் திணைக்களத்தைச் சேர்ந்த பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர் ஆகியோருடன் பிரிவு அரசியல் நிர்வாக பொறுப்பாளர் மற்றும் பிரதேச பொறுப்பாளர் ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றுவார்கள்.

பிரதேசமட்டத்தில் வெற்றிபெற்ற முதல் மூன்று விவசாயிகளுக்கு பரிசும் நற்சாட்சிப்பத்திரங்களும் வழங்கப்படும் அத்துடன் ஆறுதல் பரிசாக பத்துப் பேருக்கு பரிசில்களும் நற்சான்று பத்திரங்களும் வழங்கப்படும்.

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சென். நீக்கலஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த வியாழன் தலைவர் பெ. யேக்கப் தலைமையில் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உதவி அதிகாரி திரு. என். இராதாகிருஷ்ணன், நிழல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு. தனபாலசிங்கம், கடற்புலிகளின் நாவாந்துறை பிரதேசப் பொறுப்பாளர் திரு. அந்தணன ஆகியோர் வருகை தந்தனர்.

பின்வருவோர் நிர்வாகிகளாகதெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. யே. சவேரியார் (தலைவர்), திரு. வி. கனகராஜா (செயலாளர்), திரு. செ. மார்க்கு (உப தலைவர்), செல்வி கு. குயின் (பொருளாளர்) [வி]

## "1262-ம் ஆண்டு பாண்டிய கல்வெட்டில்

# இலங்கையில் தமிழர் வாழும் பகுதி ஈழம் என்று அழைக்கப்பட்டுள்ளது"

### — விரிவுரையாளர் புஸ்பரத்தினம்

(யாழ்ப்பாணம்)

''ஆயிரத்து இருநூற்றி அறுபத்திரண்டாம் ஆண்டுக்குரிய பாண்டிய கல்வெட்டில் இலங்கையில் தமிழர் வாழும் பகுதியை ஈழம்' என்றும், அப்போது ஈழத்தை சாவக மன்னன் ஆட்சிசெய்தான்'' என்றும் கூறப்பட்டுள்ளறது.

இவ்வாறு சோழர் காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப்பெயர்கள்'' என்ற தலைப்பில் பேசும்போது யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பி. புஸ்பரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:சோழர் ஆட்சிக் காலத்தில் பொலநறுவை தலைநகரமாக உள்ளது. அவர்களது அரசியல், இராணுவ பண்பாட்டு நடவடிக்கைகள் திருகோணமலையில் இருந்துள்ளன. இதுபோன்ற முக்கியத்துவத்தைவடமேற்குஇலங்கை சிறப்பாக பூநகரி பெற்றிருந்தது.

பதவியாவில் உள்ள சிவ தேவாலய அழிபாடுகளுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாம் இராசாதிராச சோழன் காலத்துக்குரிய (கி. பி. 1163 - 1178) கல்வெட்டு ஒன்று இங்குள்ள அரவிகுலமாணிக்க ஈஸ்வரத்திற்கு ஞானதேசிக வணிக கணத்தைச் சேர்ந்த கோணவில வெண்காடன் எறிமணியொன்றை தானம் அளித்ததாக கூறுகிறது. இதனூடாக சோழர் காலத்தில்பூநகரிக்கும் திருகோணமலைக்கும் இருந்த தொடர்புகளைங் காட்டுகிறது.

மாதோட்டத்தில் இருந்த தமிழர்கள் கி. பி. 10ம் நூற்றுண்டுக்கு முன்னரே அனுராதபுர அரசிற்கு எதிராக போரிட்டதற்கு ஆதாரங்கள் உண்டு-

தமிழ்நாட்டில் நல்லூர் இடப்பெயர் பல்லவர், பாண்டியர், சோழராட்சியில் தலை நகரங்களாக உள்ளன. முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் மணியாற்றின் தென் கரையில் உள்ள நல்லூர் சோழநாட்டின் முக்கிய தலைநகராக இருந்துள்ளது.

இலங்கையில் நல்லூர் என்னும் இடப்பெயர்யாழ்ப்பாண அரசிற்குரிய தலைநகராக இருந்ததோடு, பூநகரி, திருகோணமலை, களுத்துறை, குருநாகல் ஆகிய இடங்களில் கிராமங்களுக்குரிய பெயராக இருந்துவருகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட 11ம் நூற்றுண்டுக்குரிய முதலாம் இராசேந்திரசோழன் கல்வெட்டு ஒன்று நல்லூரில் அமைந்த ஆலயமொன்றிற்கு சோழ மன்னன் தானமளித்தது பற்றிக் கூறுகிறது.

கி. பி. 10ம் நூற்றுண்டில் முதலாம் இராச இராச சோழன் இலங்கைமீது படை எடுத்து அனுராதபுரத்தைக் கைப்பற்றி (கி. பி. 993இல்) மும்முடிச் சோழமண்டலம் என்றபெயரில்சோழரின் ஒன்பதாவது மண்டலமாகஇலங்கை ஆளப்பட்டதைச் சோழக்கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. இவன் மகன் முதலாம் இராசேந்திரசோழன் கி. பி. 1017ல்முழு இலங்கையையும் வெற்றி கொண்டு சோழர் ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொண்டான். இதை பூநகரியில் உள்ள சோழமண்டலம் உறுதிப்படுத்துகிறது.

கி. பி. 10ம் நூற்றுண்டுக்கு முன்னர் இலங்கை தென் இந்திய தொடர்பிற்கு மாதோட்டம் முக்கிய துறைமுகமாகஇருந்துள்ளதுசோழர் காலத்தில் மாதோட்டத்துக்கு பதிலாக ஊர்காவற்றுறை முக்கிய துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டன.

10ம் நூற்றுண்டில் வட இலங்கை மீது படை எடுத்த தென்னிந்திய மன்னன் ஊர்காவற்றுறை ஊடாக படை கொண்டு வந்தான் என்றும் கூறப்படுகிது. (சு)

# இந்திய-பாக்.எல்லை பகுதியில் பெருமளவுபடையினர்குவிப்பு

(புதுடில்லி

ஜம்மு-காஷ்மீர் பகுதியில் இந்திய எல்லைகள் எங்கும் பெருமளவு இந்தியப்படையினர் குவிக்கப்பட்டு முழுத்தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரினுள் நுழைய தொடர்ந்தும் ஜே. கே. எல். எவ். தீவிரவாதிகள் முயன்று வருதையடுத்தே இந்த ஏற்பாடுகளை இந்தியா மேற்கொண்டுள்ளதுடன் தனது எல்லைப்பகுதியில் 5 கி. மீ. தூரத்திற்கு ஊரடங்கு உத்தரவையும் அமுல்படுத்தியுள்ளது.

இந்தியாவினுள் சட்ட விரோதமாக நுழைய முற்படும் எவரையும் சுடுமாறு படையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஜம்மு தீவிரவாதிகள் இந்தியாவினுள் நுழைந்துவிடாமல் பாகிஸ்தான் பலத்த கண்காணிப்பை போட்டுள்ளதாகவும் இதுவரை 700 பேர்வரை கைது செய்யப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## சூழல் ஆரோக்கியத்தை பாதுகாக்க வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

இல்லங்களில் அலுவலகங்களில் பாடசாலைகளில் உள்ளாகவும், வீதிகளின் முன்பாக இருமருங்குகளிலும் உள்ள வளர்ந்த பற்றைகளையும் குப்பைகளையும் அழித்து சூழல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்குமாறு யாழ். மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியற் பிரிவினல் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. (154)

## அன்னைபூபதி நினைவஞ்சலி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவஞ்சலியில் நிகழ்வுகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இன்று 31-ம் திகதி மயிலணி முருகமூர்த்தி கோவிலில் இடம்பெற விருந்த நிகழ்ச்சி நாளை 1-ம் திகதி இடம்பெறும்,

நாளை 1-ம் திகதி இத்தாவில் முருசன்கோவிலில் இடம்பெவுள்ளநிகழ்ச்சி இன்று 31-ம் திகதி இடம் பெறும்.

ஏப்ரல் மாதம் 15-ம் திகதி கோப்பாய் கந்தசுவாமிகோவிலில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சி உரும்பிராய் சைவ வித்தியாலயத்தில் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## பாத யாத்ரையில் மக்கள் அணி திரள்கிறது

(கொழும்பு)

திஸ்ஸ மகாராமாவிலிருந்து கதிர்காமத்தை நோக்கி நாளை முதலாம் திகதி நடைபெறவிருக்கும் பாதயாத்திரையின் இறுதிக் கட்டத்தில் பங்குபற்றுவதற்கு தென்னிலங்கையின் பல பகுதிகளிலிருந்து மக்கள் திஸ்ஸ மகாராமாவிற்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களாக அரசுக்கு எதிராக நடைபெற்றுவரும் பாதயாத்திரையில் தற்போது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (மா)

## சீனவில் பெரும் மழை 29பேர் உயிரிழப்பு

[பீக்கிங்]

சீனவில் பெய்துவரும் கடும் மழையில் சிக்கி 31 பேர் உயிரிழந்ததுடன் 80 பேர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனவின் தென்பகுதியில் சியாங்கி மாகாணத்தில் இந்த அகோரமழை தொடர்ந்தும் 5-வது நாளாக பெய்து வருவதாகவும் இதுவரை 2 லட்சம் வீடுகள் இடிந்து வீழ்ந்ததால் சுமார் 10 லட்சம் பேர் வீடு வாசல்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதிப்போக்குவரத்து, ரயில் போக்குவரத்துகள் முற்றுகத் துண்டிக்கப்பட்டதுடன் தொலைத்தொடர்புகள் ஏதும் இல்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## மீன்பிடி வலை திருட்டு

(பளை)

வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை என்னும் பகுதியில் வைரவப்பிள்ளை சிவசாமி என்பவரின் பத்தாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடிவலை ஒன்று திருடப்பட்டுள்ளது.

## இராசிபலன்

**31/03/1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 18)**

துவர்தசி காலை 7-37 வரை, சதயம் பி இ. 1-23 வரை, இராகுகாலம் மாலை 3-14 முதல் 4-41 வரை, சுபநேரம் காலை 10-41 முதல் 12-11 வரை பிரதோச விரதம்.

மேஷம்: வாகன சுகம், தொழில் உறவு, உற்சாகம்.

இடபம்: புத்திரர் உதவி, கடன் வசூல், ஆத்மபலம்.

மிதுனம்: மனக்குறை, சகோதர விரோதம், அலைச்சல்.

கடகம்: தடுமாற்றம், குறைசேட்டல், துயரம்

சிங்கம்: உறவினர் வருகை, குடும்பசுகம், பணவரவு.

கன்னி: தர்மசிந்தனை, தொழில் மகிழ்ச்சி, தியாகம்.

துலாம்: நிலையற்ற போக்கு, குடும்பபகை, அமைதிக் குறைவு.

விருச்சிகம்: வீண் மனஸ்தாபம், தேகபீடை, வாக்குவாதம்

தனுசு: இல்லச்சிறப்பு, பயண அனுகூலம், காரிய சித்தி.

மகரம்: மனப்போராட்டம், மகிழ்ச்சிக்குறைவு, பணமுடை.

கும்பம்: அதிகார சிறப்பு, கடன் வசூல், புதிய சிந்தனை,

மீனம்: ஏமாற்றம், வைத்திய செலவு, தாமதம்.

- ஜோஸ்யர்

# பாக்குநீரிணையில் தீவிரகாவல் இந்திய - இலங்கை கடற்படை

(புதுடில்லி)

பாக்குநீரிணைப் பகுதியில் இந்திய-இலங்கை கடற்படையினர் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அண்மைக்காலமாகபடைநடவடிக்கைதீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகஇந்திய கடற்படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்-

இதேவேளை தென்னககடற்கரையோரங்களில் மிகப் பெரிய காவல் கோபுரங்கள் அமைக்கப்பட்டு கடற்பகுதி தீவிரமாக கண்காணிக்கப்படுவதாகவும் அந்தஅதிகாரி கூறினர். (சி)

## தேசிய பாடசாலை

(கொழும்பு)

கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம் தேசிய பாடசாலையாக விரைவில் தரம் உயர்த்தப்படவுள்ளது. (கே)

## சுதேசிய திருநாள் கொண்டாட்டம்

[யாழ்ப்பாணம்]

73 வது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்கள், அரியாலையில் தற்போது நடைபெற்று வருகிறது.

உதைபந்தாட்டம். எறிபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைபந்தாட்டம், தாச்சி. கெந்திப்பிடித்தல், சடுகுடு ஆகிய விளையாட்டுப்போட்டிகள் அரியாலைப்பகுதிகளில் உள்ள 8 சனசமூக நிலைய மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

இறுதி நிகழ்ச்சிகள் எதிர் வரும் தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## மீனவர்கள் பாதிப்பு

(பளை)

தாழையடி உடுதுறை கடற்பகுதியில் கடற்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனுல் மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் அடைந்துள்ளனர்.

# தேர்தல் ஆணையாளரின் அறிக்கை அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்கிறது

(கொழும்பு)

1989-ம் ஆண்டுநடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமான தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா வெளியிட்டுள்ள அறிக்கை அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தி வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் சம்பந்தப்பட்ட தேர்தலில் இடம் பெற்றதாக கூறப்படும் பல முறைகேடுகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசின் உயர்பீடத்தைச் சேர்ந்தவர்களின் எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கு இந்த அறிக்கை பெரும் பாதிப்பை ஏற்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனதிபதிதேர்தல்,பொதுத் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் எதிர்க்கட்சிகள் இந்த அறிக்கையை வைத்தே அரசுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் எனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## தவக்கால நற்சிந்தனை

நமக்கு வரும் சரீர நோய்களில் இருந்து சீக்கிரம் குணமடைய வேண்டும், நலம்பெறவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனல்எமது ஆன்ம நோயைக் குணப்படுத்த நாம் சிந்திப்பதே இல்லை. எமது ஆன்ம நோயிலிருந்து நாம் விடுபடும் போது இறைவனுடன் நாம் ஐக்கியப்பட முடிகிறது. யேசு எம்மையும் நோக்கி, ''குணமாக விரும்புகிருயா?'' என்கிருர் என்பதை மறவாதிருப்போமாக.

- மோ. தாசியஸ்

# ஜெயலலிதா வீட்டருகில் நடமாடியவர் கைது

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வீட்டின் முன்பாக நடமாடிய ஒருவர் கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொலைத் தொர்டபு சாதனங்களுடன் இவர் நடமாடிய போது பிடிக்கப்பட்டார். பின் நடைபெற்ற விசாரணையில் இவரும் ஒரு பாதுகாப்பு அதிகாரி என தெரியவந்ததாம்.

தற்போது தமிழகம் எங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# பிரபாகரனை கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்கிறதாம்

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே.பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் கைதுசெய்வது குறித்து மேலும் சட்ட நடவடிக்கைகள் எடுப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இத்தகவலை மாநிலங்களவையில் நேற்று சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. பி. ஆர். குமாரமங்கலம் தெரிவித்தார்,

மேற்படி இருவரையும் சரணடையுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டபோது அவர்கள் இதுவரை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (சி)

## ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைஆசிரியர்களுக்கான மார்ச் மாத சம்பளம் இன்னும் இரண்டொரு தினங்களில் வழங்கப்படலாம்.

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பிலிருந்து இதற்கான பணம், திருகோணமலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்துள்ளதென்றும், அங்கிருந்து பணம் வந்ததும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றூர். (சு)

# 'ரே' தமிழகம் வந்தது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தமிழக காவல் துறையினருக்கு உதவ இந்தியபுலனுய்வுத்துறை (ரே) யினர் தமிழகம் வந்துள்ளனர்.

தமிழகத்தில் இதுவரை, 500க்கும் மேற்பட்டோர் புலிகளின் ஆதரவாளர்களென கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேவையேற்படின் மேலதிக படைகளை தமிழகம் அனுப்ப மத்திய அரசு தமிழக முதல்வருக்கு உறுதியளித்துள்ளதாம். (சி)

## நான்கு வார இலவச உணவு

(ஊர்காவற்றுறை)

சித்திரை புத்தாண்டையொட்டி இடம் பெயர்ந்தோருக்கான (இ) உலர் உணவு அட்டையில் நான்குபுள்ளிகள் வெட்டப்பட்டு ஒரேமுறையில் நான்குவார இலவச உலர் உணவுப்பொருட்கள் முதலாம் திகதி தொடக்கம் கொடுக்கப்படவிருப்பதாக ஊர்காவற்துறைக் கிளை முகாமையாளர் தெரிவித்தார். (59)

31ம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் மயில்வாகனம் சின்னையா

தோற்றம்: 12 1 1914 மறைவு: 1-3-1992

பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று 31-03-92 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

170, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ 2008)

மனைவி, மகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்.

# தேசவிரோதிகளுக்கு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சி. செல்லையா [மயிலிட்டி] காட்டிக் கொடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட திரு. முனுசாமி யோசேப் [கிளிநொச்சி] இராமையா இராமலிங்கம் [வவுனியா] கொள்ளை பாலியல் வன்முறை போன்ற சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்துள்ள தம்பன் செல்லத்தம்பி [கரவெட்டி] ஆகியோரின் விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதுடன் இவர்களில் செல்லையாவைத்தவிர மற்ற அனைவருக்கும் விடுதலைப்புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தமிழினத் தேசத்துரோகியாகியஅல்பிரட் துரையப்பாவின் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்க வேண்டுமென முனைப்புடன் செயற்பட்ட இரகசியப் பொலிஸ் அதிகாரி தாமோதரம்பிள்ளை, பேரின்பநாயகம், தனபாலசிங்கம் செல்லையா ஆகியோர் திட்டமிட்ட முறையிலேயே செயற்பட்டுள்ளார்கள். இவ்விடயங்களை நன்கு விசாரித்து, ஆழமாக ஆராய்ந்ததில் இதில் சம்பந்தப்பட்ட செல்லையா காட்டிக்கொடுக்க வேண்டும் என்று திட்டமிடாமலேயே ஆரம்பத்தில் இவ்விடயத்தைத் தனபாலசிங்கத்திற்குக் கூறியுள்ளார். அதன் பின்னர் பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை, தனபாலசிங்கம் ஆகியோரால் பின்னப்பட்ட சூழ்ச்சிவலைக்குள் திட்டமிட்டுஇவர்வீழ்த்தப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இந்த நடவடிக்கைகளில் பங்களித்தபோதும் அடிப்படையில் காட்டிக்கொடுக்கும் எண்ணமில்லாதிருந்த செல்லையாவை மன்னித்து விடுதலை செய்கின்றோம்.

இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட தனபாலசிங்கம் (1988 - 11 -04 அன்று] மரணமடைந்துவிட்டார். தம் சொந்தச் சுகபோக நலன்களுக்காகச் சிங்கள எஜமான்களுக்கு விசுவாசமாகத் திட்டமிட்டுக் காட்டிக்கொடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பேரின்பநாயகம், தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கு மரணதண்டனை வழங்கப்படுகின்றது. அத்துடன் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சிறீலங்கா அரசுக்குத்துணைபோன யோசெப், இராமலிங்கம், சமூக விரோத நடவடிக்கைகளான பாலியல் வன்முறை, [1981-ம் ஆண்டு குடத்தனை வைத்தியசாலையில் பெண்களை பாலிய வன்முறைக்குள்ளாக்கியமை] கொள்ளை போன்றவற்றி ஈடுபட்ட செல்லத்தம்பி ஆகியோருக்கும் எம்மால் மரண தண்டனை வழங்கப்படுகின்றது.

நீண்ட காலத்துக்கு முன்னைய காட்டிக்கொடுப்பிற்கு ஏன் இன்று தண்டனை வழங்கப்பட வேண்டும்? போராட்டம் பெருமளவிலான வளர்ச்சியடையாத காலகட்டக் காட்டிக் கொடுப்பிற்கு மன்னிப்பு வழங்க முடியாதா? என்பன போன்ற சில கேள்விகள் எம்மிடம் முன்வைக்கப்பட்டன.

தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்து எம் மக்களுக்கு எதிரான துரோக நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவனுக்குக் 'காலம்' என்பது ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்து விடமுடியாது. அதேபோல எமது விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பகாலக் காட்டிக் கொடுப்பானது எம்மை ஒட்டுமொத்தமாக அழித்தொழிப்பதற்கான சதி நடவடிக்கையாகும்.

இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைந்திருக்கும் எமது விடுதலை வித்து, சிறு அரும்பாக முளைவிட்ட காலத்தில் நசுக்கி, வேரோடு அழித்துவிட நினைத்தவர்களை எங்ஙனம் மன்னிப்பது?

# தமிழகத்தில் பாதுகாப்பு உஷார் நிலையில்

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படையைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் தமிழகத்தில் ஊடுருவியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து தமிழகத்தில் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் முக்கிய சாட்சிகளையும் மற்றும் தமிழக அரசியல்வாதிகளையும் அழிக்கும் பொறுப்பு மேற்படி குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசட்டநாதர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை துர்க்கைஅம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற ஏற்பாடகியுள்ளது.

### மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

மணலாறு மோதலில் சீன டாங்கியை புலிகளின் எதிர்ப்புக்கணை எப்படித்துளைத்தது என்பது பற்றிய கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது ''கடந்த வாரம் கொக்குத்தொடுவாயில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது டாங்கி எதிர்ப்பு ஆயுதம் ஒன்றை விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றியுள்ளனர். இதன்மூலம் சீனடாங்கிகளான ரி85, ரி 86 ரக டாங்கிகள் இரண்டை புலிகள் தாக்கி சேதம் விளைவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்பு பயிற்சி பெற்ற குழு ஒன்றும் தற்போது யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

சீனத்தயாரிப்பான ரி 86 டாங்கிசாரதியின் வெளிப்பார்வை துவாரத்தினூடாக உட்புகுந்த கணையினுல் சாரதி ஸ்தலத்திலே கொல்லப்பட்டதுடன் வேறும் இருபடையினர் காயமடைந்தனர். டாங்கியில் இருந்த இராணுவத்தினர் அனைவரும் எரிகாயங்களுக்குள்ளானுர்கள் டாங்கியின் 'வயரிங் சிஸ்டம்' முழுவதும் எரிந்து டாங்கி இயங்க முடியாமல் செயலிழந்துவிட்டது. இரண்டு வீரர்களின் செவிப்பறை பாதிக்கப்பட்டு அவர்கள் கேட்கும் சக்தியை இழந்துள்ளனர். இனி அந்த டாங்கிக்கு புதிதாக வயரிங் செய்தால்தான் அதனைப்பயன்படுத்த முடியும் என்றும் கூறினர். (ரி)

## முத்திரை பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் எல்லைப்பரப்பிற்குள் அடங்கிய பாடசாலைகளின் மாணவர்கள் உணவு முத்திரைக்கான பொருட்கள் இன்று 31ம் திகதி தொடக்கம் 'உ' அட்டைக்கிளையில் விநியோகிக்கப்படும் என்று பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

### கண்டியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

காலை 10.30 மணியளவில் வத்தேகம, மடவளை பகுதியில் கேட்ட இச்சத்தங்களால் பல கட்டிடங்கள் அதிர்ந்தனவாம் மக்களும் பீதியடைந்தனராம்.

இதேவேளை அன்றைய தினம் கண்டி நகர்ப்பகுதியிலும் பலத்த வெடிச்சத்தங்கள் கேட்டுள்ளன. (சி)

### சூரியத் தாக்குதலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாகப் படையில் சேர்க்கப்பட்ட இவர்கள் தொடர்ச்சியாக பல மணி நேரம் நண்பகல் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பலர் திடீர்திடீரென மயங்கி வீழ்ந்ததாகவும் இவர்கள் ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இருவர் உயிரிழந்ததுடன் 18 பேரின் நிலை கவலைக்கிடமாய் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மீரிகம பகுதியில் அம்பிபஸ்ஸ முகாமில் இடம் பெற்றுள்ளது. (சி)

### மகாபொல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாபொல திட்டத்தின் கீழ் தற்போது மாதாந்தம் 650 ரூபா கொடுக்கப்படுகின்றது. இதில் 500 ரூபா மகாபொல நம்பிக்கை நிதியில் இருந்தும், மிகுதி 150 ரூபா திறைசேரியினுலும் வழங்கப்படுகிறது என்றும் ஜனுதிபதி மேலும் தெரிவித்தார்.

புலமைப் பரிசிலை ஜனுதிபதியிடம் இருந்து நேரடியாகப் பெறுவதற்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து 250 மாணவர்கள் சென்றுள்ளனர். (வி)

### பேராசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தப்பட்டதற்குச் சூத்திரதாரியாக இருந்தார் என அமைச்சர் காமினி திஸநாயக்கா மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர், பி. உளந்துவ, இந்தக் குற்றச்சாட்டிலிருந்து காமினி திஸநாயக்கா விடுதலை செய்யப்படுவதாக நேற்று அறிவித்தார்.

### தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி

மாற்றமும், முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கிறது. பௌத்த பிக்குகள் குழு ஒன்று யாழ் விஜயம் மேற்கொண்டு விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களை சந்திக்கவும். அங்குள்ள மக்களை நேரில்சந்தித்து அவர்கள் கஷ்டங்களை அறிய முன்வந்திருப்பதும் இதற்கு நல்ல உதாரணமாகும்.

கத்தோலிக்க ஆயர் குழுவின் யாழ். விஜயமும் இதற்கு நல்ல வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

மதத் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மனமாற்றத்தை அரசு நல்லமுறையில் பயன்படுத்தி இனப்பிரச்னைக்கு கூடியவிரைவில் நல்ல தீர்வு ஒன்றை எடுக்கவேண்டுமென அரசியல் அவதானிகள் அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளதாக அறியவருகிறது.

இதேவேளையில் பௌத்த பிக்குகளின் உத்தேச யாழ். விஜயத்தின் முடிவுகளை எதிர்பார்த்தே அரசு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகளைப் பின்போட்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81